# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 24 புதன்கிழமை 10.12.2025 கதிர் 404







# யாழ். பல்கலையில் வெற்றிடங்கள் நிரப்புமாறு கோரி தொழிற்சங்க சம்மேளனம் வேலைநிறுத்த எச்சரிக்கை!

கொழும்பு, டிச. 10

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிலவும் போதனைசாராப்பணியாளர்வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், தவறின் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தள்ளப்படுவோம் என்றும் அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனைத்துப் பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனம் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 355 போதனைசாராப்பணியாளர்வெற்றிடங்கள்நிலவுகின்றன. இந்த ஆளணிவெற்றிடங்கள்அனைத்தும்அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைவானவை ஆகும்.

நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் போதனைசாராப் பணியாளர் ஆட்சேர்ப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள்

7

# மலையகத் தமிழ்த் தேசியத்துக்கு தாயகம் மலையக பூமிதான்....!

## சிங்கள தேசம் அதை ஏற்கவில்லை என்று மனோ சுட்டிக்காட்டு



கொழும்பு, டிச. 10

"மலையகத் தமிழ்த் தேசியத்துக்குத் தாயகம் மலையக பூமிதான்.

ஆனால், இதை நாம்தான் சொல்லி திரிகின்றோம். ஆனால், சிங்கள தேசம் அதை ஏற்கவில்லை." - என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் தனது முகநூல் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, அவிசாவளை, குருநாகல் ஆகிய பிரதேச தோட்டங்களில் இருந்து, உழைச்சு, மண்ணுக்குள்ள போங்க. ஆனால், காணி எல்லாம் தர மாட்டோம்.

நுவரெலியா தவிர, ஏனைய கீழ் நாட்டு பெருந்தோட்ட காணிகளை, அயல் சிங்கள கிராமத்தவருக்குப் பிரிச்சுக் கொடுப்போம். ஆனால், உங்களுக்குத் தர மாட்டோம்!

இவைதானே உங்கள் (சிங்கள தேசம்) நிலைப்பாடு?

இதுதான் மலையகக் காணி உரிமை பிரச்சினை..!

இதைப்புரிந்துகொள்ள முடியாதவர்கள், தற்குறிகள் அல்லது வறட்டுவாதிகள் ஆவர்.

மாண்புமிகு மலையகத்தமிழர், மலையக மண்ணில் வாழணும்தான். அதையே நானும் விரும்புகின்றேன்.

ஆனால், பாதுகாப்பான காணி தர மறுத்தால் என்ன செய்வது?

ஆகவேதான், மாற்று யோசனையா, "வடக்கு - கிழக்கில் குடியேறி வாழ விருப்பமா?" என நான் சந்தித்த மலையுச்சியில் வாழும் மக்களைக் கேட்டேன். எனக்கே ஆச்சரியம், அவர்கள் உடனே உடன்பட்டுக் கோஷம் போட்டார்கள்!

புலம்பெயர்வால், வடக்கு - கிழக்கில் இன்று காலியாகி, காடாகி வரும் காணிகளை, உரிமையாளர், மனமுவந்து தந்தால் இது சாத்தியப்படலாம். அவ்வளவுதான்!

என்னில் குற்றம் காண்பவர்கள், தோழரின் பக்கத்தில், இருக்கும் மாண்புமிகு மலையக நண்பர்கள், தங்கள் தோழரிடம் சொல்லி, பாதுகாப்பான காணிகளை மலையக மக்களுக்கு வாங்கித்தாருங்கள்!

"இடம், கொஹேத தியன்னே, மனோ?" (காணி, எங்கே இருக்கின்றது, மனோ?) என தோழர், என்னிடமே திருப்பிக் கேட்டார். ஆகவே, அவருக்கு இந்தக் காணி விடயத்தில் புரிதல் இல்லை.

ஆகவே, உண்மையான என்.பி.பி. நண்பர்கள் (தற்குறிகள் இல்லை!) அவருக்கு விளக்கிக் கூறனும்.

7

# திருமலையில் இராணுவ வாகனம் மோதி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபப் பலி!

திருகோணமலை, டிச. 10

திருகோணமலையில் இராணுவ வாகனம் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கிண்ணியாவைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே உயிரிழந்தார்.

மேற்படி இளைஞருக்குத் திருமணமாகி மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இளைஞர் தனது பெற்றோரின்

7



## சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

# நீதி கோரி உறவுகள் போராட்டம்!

வவுனியா, டிச. 10


சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் இன்று கவனவீர்ப் புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

வவுனியா பழைய பஸ்

7




# நெடுந்தீவில் கடலில் தவறி வீழ்ந்து ஒருவர் மரணம்!



யாழ்ப்பாணம், டிச. 10

யாழ். நெடுந்தீவில் பயணிகள் படகில் தேங்காய் மூட்டைகளை ஏற்றும்போது கயிற்றில் தடுக்கிக் கடலில் வீழ்ந்தவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை 6.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் நெடுந்தீவு மாவலித் துறைமுகத்தில் தேங்காய் மூட்டையுடன் "நெடுந்தாரகை" பயணிகள் படகில் ஏறுவதற்கு முயன்ற போது படகு கட்டும் கயிற்றில் தடுக்கிக் கடலுக்குள் வீழ்ந்த நிலையில்

7

## மீகஹகிவுல பிரதேசத்தின் மொரஹெல போகஹபத்தன பகுதியில் மண்சரிவு!

மீகஹகிவுல பிரதேசத்தின் மொரஹெல போகஹபத்தன பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பாதுகாப்பு மையங்களுக்குச் செல்லாத ஒரு சில குடும்பங்கள் தொடர்ந்து இங்கேயே தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்சரிவு ஏற்பட்ட போதிலும், அப்பகுதியில் இருந்து எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மண்ணில் புதையுண்ட எழுவரின் சடலங்களை காண்பித்த வளர்ப்பு நாய

மாத்தளை, டிச. 10

மாத்தளை, பல்லேபொல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பொக்க கிராமத்தில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் உயிரிழந்த நிலையில், அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மீட்புப் பணியின் போது, உயிரிழந்த குடும்பத்தின் செல்லப் பிராணியான நாய் ஒன்று, மீட்புப் பணியாளர்களை அதன் உரிமையாளர்கள் புதையுண்ட இடத்துக்கு வழிகாட்டி உதவியது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் செல்லப்பிராணியின் விசுவாசம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளதுடன், நெகிழச் செய்துள்ளது.

எவ்வாறாயினும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்ட இடம் இன்னும் முழுமையாக மண்சரிவுகளால் மூடப்பட்டுள்ளது என்றும், வீட்டின் எச்சங்களைக்கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறியுள்ளனர். இதனிடையே குறித்த பகுதியில் தொடரும் அச்சுறுத்தல் காரணமாக சுமார் 80 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், நிலப் பகுதி ஸ்திரமற்றதாகக் காணப்படுவதால், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விரைந்து முறையான இடர் அறிக்கையை வழங்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றியம் 1.8 மில்லியன் யூரோவை வழங்கத் தீர்மானம்



கொழும்பு, டிசெ.10


ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 1.8 மில்லியன் யூரோ அவசர மனிதாபிமான உதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த உதவியானது "திட்வா" (Ditwa) புயலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்க உதவும் என ஐரோப்பிய ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுக் குறிப்பிட்டுள்ளது.

தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செம்பிறை (Red Crescent) குழுக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை ஆரம்பித்துள்ளன என்றும், அந்த அமைப்புகள் ஊடாக வழங்கப்படும் 5 இலட்சம் யூரோக்களும் இந்த மனிதாபிமான உதவித் தொகையில் உள்ளடங்குவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பலத்தையும் ஆதரவையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் இதில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மீகஹகிவுலவில் மண்சரிவு: உயிரிழப்பு இல்லை



கொழும்பு, டிசெ.10

மீகஹகிவுல பிரதேசத்தின் மொரஹெல போகஹபத்தன பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பாதுகாப்பு மையங்களுக்குச் செல்லாத ஒரு சில குடும்பங்கள் தொடர்ந்து இங்கேயே தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்சரிவு ஏற்பட்ட போதிலும், அந்த இடத்தில் இருந்து எந்தவிதமான உயிர்ச்சேதங்களும் பதிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புயலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கைக்கு சமனாக உறவுகளை தேடிவந்த தாய்மார் இறப்பு




காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளை தேடிவந்த கிட்டத்தட்ட 500 பெற்றோர்களும் உறவினர்களும் பதில்களோ நீதியோ பெறாமல் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை சமீபத்திய ‘டித்வா’ சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நெருக்கமானது. ஆயினும் எங்கள் இறப்புகளுக்கு, எந்த நாடும் துக்கப்படவோ, அக்கறைப்படவோ இல்லை. இதனை சர்வதேச சமூகம் ஏன் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டது? என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் எமக்கான தேவை குறித்த வெளிப்படுத்தல் எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம். வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் பெற்றோர்களும், அன்புக்குரியவர்களுமான நாங்கள், எங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தேடி 16 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடி வருகிறோம்.

எங்கள் போராட்டம் பதில்களோ அன்றி நீதியோ இல்லாமல் தொடர்கிறது. எங்கள் அன்புக்குரியவர்களின் நிலை என்ன என்று தெரியாமல், வாழ்க்கை தாங்க முடியாத அளவு துயரமாக உள்ளது.

இந்த “சர்வதேச மனித உரிமைகள் தினம்” 1948 டிசம்பர் 10 முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்த ஆண்டு முதல், (இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது தொடக்கம்) இலங்கையில் தமிழர்கள் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு, இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இனப்படுகொலையின் மிகவும் கொடூரமான இனப்படுகொலையொன்று முள்ளிவாய்க்காலில் 2009 மே மாதம் மேற்கொள்ளப்பட்டது. சரணடைந்தவர்கள் விசாரணைக்குப் பிறகு விடுவிக்கப்படுவார்கள் என்று பொய்யான வாக்குறுதி அளித்து அதை நம்பி தாமாகவே சரணடைந்த, 29 குழந்தைகள் உட்பட குடும்பமாகச் சரணடைந்தவர்களும் உறவுகளால் கையளிக்கப்பட்டவர்களும், இலங்கை அரசாங்கத்தால், வலிந்து காணாமலாக்கப்பட்டார்கள். அந்த நாள் முதல், எங்கள் வலி மற்றும் போராட்டம் நின்றபாடில்லை.

16 ஆண்டுகளுக்கும் மேலாக நீதிக்காகப் போராடும் எம்மைப்பொறுத்தவரை, இந்த ஆண்டின் மனித உரிமைகள் தினத்தின் கருப்பொருளாக இந்தக் குற்றங்களுக்கான பொறுப்பேற்பே உள்ளது.

அதிகாரத்திற்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும், உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் நீதியை வழங்கும் என்று கூறி சர்வதேச சமூகத்திற்கு முன் தன்னை ஒரு மீட்பராக முன்வைக்கிறது. ஆயினும், ஒவ்வொரு முறையும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கோப்பை **(files)** மூடுவதற்கும் முன்னேற்றம் என்ற மாயையை உருவாக்குவதற்கும் செயல்திறனற்ற பொறி முறைகள் அல்லது குறுக்கு வழிகளை அறிமுகப் படுத்துகின்றனர். சர்வதேச ஆதரவுடன், நாங்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக் கின்றோம்..

தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கணவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களைத் தேடும், கிட்டத்தட்ட 500 பெற்றோர்களும் உறவினர்களும் பதில்களோ நீதியோ பெறாமல் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை சமீபத்திய “டித்வா” சூறாவளியால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு நெருக்கமானது.

ஆயினும் எங்கள் இறப்புகளுக்கு, எந்த நாடும் துக்கப்படவோ, அக்கறைப்படவோ இல்லை. எந்த நாடும் உதவிக்கும் வரவில்லை. இந்தத் தொடர்ச்சியான சோகத்தை சர்வதேச சமூகம் ஏன் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டது?

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் குறித்து, ஒரு சமரச அணுகுமுறையை பரிசீலித்து வரும் நாடுகளுக்கு, நாங்கள் ஒன்றை நினைவூட்ட விரும்புகிறோம்: இந்த அரசாங்கம் ஏற்கனவே ஒரு வருடமாக அதிகாரத்தில் உள்ளது, ஆயினும் இதுவரை நீதி வழங்கப்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. ஏற்கனவே சரிந்துள்ள நாட்டின் பொருளாதாரம் சூறாவளியால் (டித்வா புயல்) மேலும் சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் அரசுக்கு எங்கள் விடயத்தை விட அக்கறை கூடிய பல வேலைகள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகாரத்திற்கு வர இனத்துவேசத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் அரசியல் கட்சிகள் இலங்கையில் இருக்கும் வரை, எந்தக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியாக இருந்தாலும், எமக்கான நீதியை வழங்கத் தயாராகவோ அல்லது எதிர்ப்புகளை மீறி செய்யக் கூடிய திறனுடையவராகவோ இருக்க மாட்டார்.

எனவே, எங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கடும் அநீதிகளுக்கான பொறுப்பேற்பு சர்வதேச விசாரணை மூலமே வர வேண்டும், அதுவும் காலதாமதமின்றி வர வேண்டும்.

எனவே, நாங்கள் நீண்ட காலமாக முன்வைத்து வரும் வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்துகிறோம்: இனப்படுகொலை, சர்வதேச குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு **(ICC)** பாரப்படுத்தவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

## தரம் 6 இற்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால எல்லை நீடிப்பு

05 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் மீள் பரிசீலனைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பாடசாலைகளில் 06 ஆம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை அதிபர்கள் இணையவழி **(Online)** முறைமை ஊடாக சமர்ப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

இணையவழியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வசதி டிசம்பர் 05 ஆம் திகதிக்குப் பின்னர் செயலிழக்கச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிலவும் அனர்த்த நிலைமையைக் கருத்திற் கொண்டு அந்தத் திகதி டிசம்பர் 12 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் 6 ஆம் தரத்திற்கு அனுமதி பெறுவதற்கான முதலாவது மேன்முறையீடுகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை எனவும், அது தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவும் செய்திகள் பொய்யான பிரச்சாரங்கள் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2026 ஆம் ஆண்டு 06 ஆம் தரத்திற்காக முதலாம் சுற்றில் பாடசாலைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், நிலவும் வெற்றிடங்களுக்காக இணையவழி ஊடாக மேன்முறையீட்டு விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## ஹட்டன் – நோர்டன் பிரதான வீதிப் பாலத்தை புனரமைக்கும் பணியில் இராணுவம்

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக காசல்ரீ பகுதியில் உள்ள ஹட்டன் - நோர்டன் வீதிப் பாலம் கடும் சேதத்திற்கு உள்ளானது.

பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழும் அபாயத்தில் உள்ளதால், அங்கு புதிய பாலம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, தற்காலிக இரும்புப் பாலம் ஒன்றைப் பொருத்துவதற்கான கட்டுமானப் பணிகள் இன்று (10) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளை கண்டியில் அமைந்துள்ள பல்லேகெலே 31வது இராணுவ பொறியியல் படைப்பிரிவினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் பிரிவுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இப்பாலத்தின் கட்டுமானப் பணிகளுக்கு காசல்ரீயைச் சுற்றியுள்ள தோட்டத் தொழிலாளர்களின் பங்களிப்பும் பெறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி குறித்த பாலம் சேதமடைந்ததிலிருந்து, அவ்வீதியூடான போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டு, மாற்று வழிகள் ஊடாக போக்குவரத்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## கொத்மலை நீர்த்தேக்கத்தின் மீது கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை

கொழும்பு, டிசெ.10



கொத்மலை நீர்த தேக்கத்தின் மீது கனரக வாகனங்கள் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான 55 ஹெக்டயார் நிலப்பரப்பில் இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீரஆராச்சி தெரிவித்துள்ளார்.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளைத் திறப்பது தொடர்பில் இநாட்களில் பரப்பப்படும் வதந்திகள் பொய்யானவை எனவும், அறிவியல் ரீதியிலான தரவுகளின் அடிப்படையில் வான் கதவுகளைத் திறக்க கொத்மலை நீர்த்தேக்கத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.ஜே. ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

பணிப்பாளர் நாயகம் நேற்று பிற்பகல் கொத்மலை நீர்த்தேக்க அணைக்கட்டைப் பார்வையிட்ட பின்னர், கொத்மலை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், எதிர்காலத்தில் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளைத் திறப்பதற்கு முன்னர் மக்களுக்கு அறிவிப்பதற்கு, தற்போது நடைமுறையிலுள்ள முறைமையை விட வேறு முறைமையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

பிரதான வீதிகள் தடைப்பட்டுள்ளதால் நீர்த்தேக்க அணைக்கட்டின் ஊடாக வாகனங்கள் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், நேற்று முதல் அணைக்கட்டின் மீது கனரக வாகனங்கள் பயணிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும், தடைப்பட்டுள்ள வீதிகள் சீராகும் வரை இலகு ரக வாகனங்கள் மட்டுமே அணைக்கட்டின் மீது பயணிக்க அனுமதிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுஷ்கா திலகரத்ன, நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கம்பளை - நுவரெலியா வீதி, இலகு ரக வாகன போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கட்டுகித்துல, ரம்பொடை நீர்வீழ்ச்சி மற்றும் தவலந்தென்ன ஆகிய இடங்களில் மண்சரிவு ஏற்பட்டிருந்த நிலையில், அவ்விடங்களில் வீதி தற்போது சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# பார்லி கூட்டத்தொடரை புறக்கணித்து ஜெர்மனி செல்லும் ராகுல் பாஜ கடும் விமர்சனம்



பார்லி கூட்டத் தொடரை புறக்கணித்து விட்டு, எதிர்க்கட்சி தலைவர் ராகுல் ஜெர்மனி சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதை பாஜ கடுமையாக விமர்சித்துள்ளது. சுற்றுலாவுக்கான தலைவர் என்பதை ராகுல் மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டதாக விமர்சனம் செய்துள்ளனர்.

பரபரப்பாக நடந்து வரும் பார்லிமெண்ட் குளிர்கால கூட்டத் தொடர் டிசம்பர் 19 வரை நடைபெறுகிறது. இதில், வந்தே மாதரம் மற்றும் எஸ்ஐஆர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியினரிடையே காரசாரமான விவாதம் நடந்து வருகிறது. எஞ்சியுள்ள நாட்கள் இன்னும் சுவாரஸ்யமான விவாதங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், லோக் சபா எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுல், பார்லிமெண்ட் கூட்டத் தொடரை புறக்கணித்து விட்டு ஜெர்மனிக்கு பயணம் மேற்கொள்ள இருக்கிறார். டிசம்பர் 15ம் தேதி ஜெர்மனி செல்லும் அவர், பெர்லினில் 17ம் தேதி நடக்கும் புலம்பெயர் இந்தியர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே, வந்தே மாதரம் தொடர்பாக பிரதமர் ஆற்றிய உரையின் போது பார்லிமெண்டை புறக்கணித்த ராகுலின் இந்த ஜெர்மனி பயணத்தை பாஜவினர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ராகுலின் இந்தப் பயணம் குறித்து பேசிய பாஜ தேசிய செய்தித் தொடர்பாளர் ஷெசாத் பூனவாலா, இந்தியாவுக்கு எதிராக அவதூறு பரப்பும் சுற்றுப்பயணத்தை தொடங்குகிறார் என்று குற்றம்சாட்டியிருந்தார்.

மேலும், அவர் கூறுகையில், ' ராகுல் மீண்டும் ஒருமுறை தன்னை சுற்றுலாவுக்கான தலைவர் (டுநயனநச முகீயசலயவயல) என்பதை நிரூபித்து விட்டார். மக்கள் உழைக்கும் நோக்கத்தில் இருக்கும் வேளையில், ராகுல் எப்போதும் சுற்றுலா செல்லும் எண்ணத்திலேயே இருந்து வருகிறார். பீஹார் சட்டசபை தேர்தலின் போது எதிர்க்கட்சி தலைவர்கள் தீவிர ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அந்த வேளையில், ராகுல் மட்டும் வனத்தில் சபாரி சென்றிருந்தார்,' என்றார். (ஐ)

## 2026ல் 210 தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும்: பொதுக்குழு கூட்டத்தில் இபிஎஸ் பேச்சு



அடுத்தாண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும் என பொதுக்குழுவில் பேசுகையில் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த அதிமுக செயற்குழு, பொதுக்குழு கூட்டத்தில் இபிஎஸ் பேசியதாவது: தீய சக்தி திமுகவை அடியோடு அகற்ற வேண்டும் என்பதற்காக, எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கினார். ஜெயலலிதா பல்வேறு சோதனைகளை தாங்கி அதிமுகவை கட்சியை கட்டி காத்தார். எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகிய இரு பெரிய தலைவர்களுக்கு வாரிசு இல்லை. நாட்டு மக்களை தான் வாரிசாக பாரத்தார்கள். எண்ணற்ற திட்டங்களை கொண்டு வழங்கிய காரணத்தினால் தான், இன்றைக்கும் அதிமுகவை எவராலும் தொட்டு பார்க்க முடியவில்லை.

மின் கட்டணத்தைக் கேட்டால் ஷாக் அடிக்கிறது என்று கூறிய ஸ்டாலின், அதனை ஆண்டுக்கு 5% உயர்த்தினார். இப்போது, கரண்டு பில்லைக் கேட்டாலே ஷாக் அடிக்கிறது. மாணவர்களுக்கு லேப்டாப் கொடுக்க தொடர்ந்து வலியுறுத்தினோம். இளைஞர்கள் ஆதரவை இழந்ததால், தேர்தலை மனதில் வைத்து இப்போது தான் அதற்கு ஒப்புதல் கொடுக்கிறார்.

மக்களின் செல்வாக்கு, இளைஞர்களின் செல்வாக்கை முதல்வர் ஸ்டாலின் இழந்துவிட்டார். தோல்வி பயம் வந்துவிட்டதால், அவசர அவசரமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை ஸ்டாலின் அறிவிக்கிறார். அடுத்தாண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும். தமிழக மக்கள் லோக்சபா தேர்தலுக்கு ஒரு மாதிரியும், சட்டசபை தேர்தலுக்கு வேறு மாதிரியும் ஓட்டளிப்பார்கள்.

பாஜவுடன் அதிமுக கூட்டணி வைத்திருக்கிறது என்பதை தாண்டி, அதிமுகவை நோக்கி என்ன சொல்ல முடியும்? அதிமுக ஆட்சியை பற்றி முதல்வர் ஸ்டாலின் ஒரு குறை சொல்ல முடியுமா? அடுத்தாண்டு தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் போது முதல்வர் ஸ்டாலின் எந்த நிலையில் இருப்பார் என்று தெரியவில்லை. தேர்தலை மனதில் வைத்தே மேலும் 30 லட்சம் குடும்பத்தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் தருவதாக சொல்கின்றனர்.

2024ல் அதிமுக- பாஜ கூட்டணி 41.33 சதவீத ஓட்டுக்கள் பெற்றது. 43 சட்டசபை தொகுதிகளில் 2 லட்சம் ஓட்டுக்களால் நாம் ஆட்சியை இழந்தோம் என்று பல தேர்தலில் தனிப்பெரும்பான்மை பெற்ற அதிமுக பற்றி தெரியாமல் முதல்வர் ஸ்டாலின் பேசுகிறார். கிட்னி முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது அதிமுக ஆட்சி அமைந்த பிறகு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று திமுக ஆட்சியில் விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உள்ளது. திமுக ஆட்சியில் எந்த ஒரு பெரிய திட்டத்தையும் கொண்டு வரவில்லை அதிமுக திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டி திறக்கின்றனர். பல லட்சம் கோடி முதலீடுகளை ஈர்க்கப்பட்டதாக பொய்யை பேசி, பேசி திமுக உண்மையாக்க பார்க்கிறது. தமிழகத்திற்கு கிடைத்த முதலீடுகள் பற்றி கேட்டால் அமைச்சர் வெள்ளை காகித்தை காட்டுகிறார்.

பாஜவிற்கு நாங்கள் அடிமை என்று ஸ்டாலின் சொல்கிறார். அதிமுக யாருக்கும் எப்போதும் அடிமையாக இருந்தது இல்லை. காங்கிரஸ் இடம் அடிமையாக இருந்தது திமுக தான். காங்கிரஸ் தந்த கூட்டணியை அழுத்தத்துக்கு பணிந்தது யார்? கருணாநிதி சொத்தாகிவிட்டது திமுக. திமுக இன்று கார்பரேட் கட்சியாகி விட்டது. துரைமுருகனை ஏன் துணை முதல்வர் ஆக்கவில்லை? திமுகவை போல் அல்ல அதிமுக. அதிமுக தொண்டர்களின் கட்சி. விசுவாசமாக உழைப்போருக்கு தேர்தலில் வாய்ப்பு உள்ளது. அதிமுக ஆட்சி அமைய பாடுபட வேண்டும்.

அதிமுக ஜனநாயக இயக்கம். உச்சபட்ச பதவிக்கு வர முடியும். அதிமுக ஆட்சியில் பொங்கல் பண்டிகைக்கு ரூ.2,500 வழங்கினோம். வரும் பொங்கல் பண்டிகைக்கு குடும்ப அட்டைக்கு தமிழக அரசு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். அதிமுக பலமான கட்சி. வலுவான கூட்டணியை அமைக்கும். தேர்தல் அறிவிப்பு வந்ததும் நல்ல கூட்டணி அமையும். கவலைப்படாதீர்கள். கூட்டணிக்கு அதிமுக தான் தலைமை தாங்கும். அதிமுக ஆட்சி அமைக்கும். திமுகவை வீட்டுக்கு அனுப்ப மக்கள் முடிவு செய்துவிட்டனர். தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு இபிஎஸ் பேசினார். (ஐ)



## விஜயை சந்தித்ததால் தி.மு.க., கூட்டணியில் குழப்பம் இல்லை: பிரவீன் சக்கரவர்த்தி

"த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்ததில் எந்த தவறும் இல்லை தி.மு.க., கூட்டணியிலும் குழப்பம் இல்லை," என, காங்கிரஸ் கட்சியின் தரவு பகுப்பாய்வு பிரிவு தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி விளக்கம் அளித்துள்ளார்.

தி.மு.க.,வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச, காங்கிரசில் ஐவர் குழு அமைக்கப்பட்டு உள்ளது. அக்குழுவினரும், சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, தொகுதி பங்கீடு குறித்து பேசியுள்ளனர். இந்நிலையில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி, த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்து பேசியுள்ளார். அப்போது, காங்கிரஸ் விரும்பும் 135 தொகுதிகள் பட்டியலை கொடுத்து, 75 சீட் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்பு, தி.மு.க., - காங்கிரஸ் கூட்டணியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க.,வுடன் குழு அமைத்து தொகுதி பங்கீடு குறித்து பேசத் துவங்கி இருக்கும் நிலையில், தி.மு.க.,வுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கும் விஜயை பிரவீன் சக்கரவர்த்தி எப்படி சந்திக்கலாம் என, காங்கிரசில் இருக்கும் தி.மு.க., ஆதரவு தலைவர்கள் கொந்தளித்தனர்.

பிரவீன் சக்கரவர்த்தி மீது கட்சி விரோத நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குரல் எழுப்பி அதை வலியுறுத்தி கட்சித் தலைமைக்கு கடிதமும் எழுதினர். இதையடுத்து, பிரவீன் சக்கரவர்த்தி நெருக்கடிக்கு ஆளாகி உள்ளதாக கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக அவர், ஆங்கில இணையதள ஊடகம் ஒன்றுக்கு, அளித்த பேட்டி:எல்லா சந்திப்புகளுக்கும் பின்னணியில், ஒரு அரசியல் திட்டம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இட்லி, வடை, தோசை சாப்பிடுவது போன்ற சாதாரண சந்திப்பாகவோ அல்லது திரைப்படங்கள் குறித்து பேசுவதற்கான சந்திப்பாகவோ கூட, விஜயை நான் சந்தித்திருக்கலாம். விஜயை சந்தித்ததில் எந்த தவறும் எனக்குத் தெரியவில்லை. அதேநேரம், த.வெ.க.,வில் இணையும் எண்ணமும் எனக்கு இல்லை. விஜயை சந்தித்ததால், தி.மு.க., கூட்டணியில் எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை. இவ்வாறு அவர் கூறி யுள்ளார். (ஐ)

## ஸ்டைலிஷ் நபர்கள் பட்டியலில் ஷாருக்: நியூயார்க் டைம்ஸ் பட்டியலில் வெளியீடு

நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டு உள்ள 2025 ம் ஆண்டின் உலகின் ஸ்டைலிஷ் நபர்கள் வரிசை பட்டியலில் பாலிவுட் நடிகர் ஷாருக்கான் இடம் பிடித்துள்ளார்.

பாலிவுட் நடிகரான ஷாருக்கான் இந்தாண்டு நியூயார்க் நகரில் நடைபெற்ற மெட்காலா விழாவில் பங்கேற்றார். அப்போது அவர் பிரபல ஆடை வடிவமைப்பாளர் சப்யசாச்சி முகர்ஜி வடிவமைத்த ஆடையை அணிந்திருந்தார். விழாவில் அவர் அணிந்திருந்த ஆடை மற்றும் கே எழுத்து பதித்த ஆபரணங்களுக்காக 2025 ம் ஆண்டின் உலகின் ஸ்டைலிஷ் நபர்கள் வரிசையில் இடம் பெறச் செய்துள்ளது.

இது குறித்து நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டுள்ள கட்டுரையில், உலகளாவிய விழாவிற்கு ஒரு தனித்துவமான இந்திய நேர்த்தியை ஷாருக்கான் கொண்டு வந்துள்ளார் என பாராட்டு தெரிவித்து இருந்தது.

2025 ம் ஆண்டின் ஸ்டைலிஷ் நபர்கள் தேர்வில் நடிகர் ஷாருக்கான் மட்டுமின்றி சப்ரினா கார்பென்டர், டோச்சி, ஏபி ராக்கி, விவியன் வில்சன், நிக்கோல் ஷெர்சிங்கர், வால்டன் கோகின்ஸ், ஜெனிஃபர் லாரன்ஸ், ஷாய் கில்ஜியஸ்-அலெக்சாண்டர், கோல் எஸ்கோலா மற்றும் நோவா வைல் உள்ளிட்ட பிரபலங்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. (ஐ)





# கண்ணை பாதிக்கும் கம்ப்யூட்டர்?

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு கம்ப்யூட்டர் பயன்பாடு ரொம்பவும் அதிகரித்துவிட்டது. பெரும்பாலான நிறுவனங்கள் ஊழியர்களுக்கு மடிக்கணினியை இலவசமாக வழங்கியுள்ளன. அலுவலகக் கூட்டங்களும் உரையாடல்களும் கம்ப்யூட்டரில்தான்.

கம்ப்யூட்டரிலிருந்து பார்வையை எடுக்க முடியாத அளவுக்கு நிமிடத்துக்கு நிமிடம் குறுஞ்செய்திகளும் மின்னஞ்சல்களும் வந்துகொண்டே இருக்கின்றன.

இப்படி, நீண்ட நேரம் ஒளி தரும் திரைகளைப் பார்ப்பதால் கண்களுக்கு அழுத்தம் ஏற்படும். அந்த அழுத்தம் நம் பார்வைத் திறனைப் பாதிப்பதுடன் பார்வைக் கோளாறையும் ஏற்படுத்துகிறது.

திறன்பேசி ஃ டேப்லட் வருகைக்குப் பிறகு நாளொன்றுக்கு ஒருவர் 2லிருந்து 4 மணி நேரம் வரை அதைப் பயன்படுத்துகிறார்.

இதன்படி நவீன வாழ்வியல் வருடத்துக்கு 700 - 1400 மணி நேரத்தை நம்மிடமிருந்து பறித்துக்கொள்கிறது. அதுமட்டும்மல்ல, நம் பார்வையையும் பறித்துக் கொள்கிறது.

### சிவிஎஸ்' (CVS) என்றால் என்ன தெரியுமா?

20ம் நூற்றாண்டில் பிரபலமான ஒரு மருத்துவப் பதம் 'சிவிஎஸ்'. **Cardio Vascular System – (CVS).** அதாவது, இதய ரத்த நாள மண்டலம். இந்த நூற்றாண்டில் பிரபலமாகி வரும் பதமும் 'சிவிஎஸ்'தான். **Computer Vision Syndrome – (CVS).** அதாவது, கணினிப் பார்வைக் கோளாறு.

கம்ப்யூட்டரைப் பயன்படுத்துபவர களில் 66% பேருக்கு இந்தப் பாதிப்பு இருக்கிறது. இது குழந்தைகளையும் பாதிக்கிறது என்பதுதான் அதிக கவலைக்குரியது. உண்மையில் நம் அலட்சியம் ஏற்படுத்தும் விளைவுகளில ஒன்றுதான் இந்தக் கணினிப் பார்வைக் கோளாறு.

### அறிகுறிகள்

கண் வறட்சி அடைவது, பார்வை குறைதல், அடிக்கடி தலைவலி வருவது, கழுத்திலும் தோள்பட்டையிலும் அசௌகரியம் ஏற்படுவது, கண்ணில் மணல் விழுந்தது போன்று உறுத்தல் உண்டாவது அல்லது ஓர் அழுத்தம் தெரிவது, கண் சிவப்பது, கண் சோர்வடைவது என ஏதாவது அறிகுறி தெரிந்தால் உடனடியாக கண் நல

### மருத்துவரைப் பாருங்கள்.


ஆரம்பத்திலேயே இதைக் கவனித்துவிட்டால், பிரச்னை பெரிதாகாது. தவறினால், கண்களுக்குக் கண்ணாடி அணிவது கட்டாயமாகும். அது மட்டுமல்லாமல், பணியிடங்களில் வேலைத் திறனையும் பாதிக்கும். உறக்கமும் கெடும்.

### தடுப்பது எப்படி

கணினித் திரையைப் பார்க்கும் நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள். தொடர்ந்து அரை மணி நேரத்துக்கு மேல் திரையைப் பார்க்காதீர்கள். கண்களைத் திருப்பி சில நொடிகளுக்கு அருகில் உள்ள பொருள்களைப் பாருங்கள்.

கணினி மேஜையும், நாற்காலியும் வசதிக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் வகையில் இருப்பது நல்லது. முதுகு மற்றும் கழுத்தின் பாரத்தைத் தாங்கும் வகையில் இருக்கையில் குஷன் இருந்தால் இன்னும் சிறப்பு. நிமிர்ந்து உட்காருவதும், கால்களை செங்குத்தாகத் தொங்கப்போட்டு, தரையில் பாதங்களைப் பதித்துக்கொள்வதும் முக்கியம்.

அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து கைக்கு எட்டும் தூரத்தில் மானிட்டர் இருக்க வேண்டும். கணினித் திரையின் மேல்மட்டம் பார்வை மட்டத்துடன் ஒத்துப்போக வேண்டும். மவுஸை இயக்கும் கைகளுக்கு இருக்கையிலோ, மேஜையிலோ சப்போர்ட் இருக்க வேண்டும். விசைப்பலகை மேஜையின் நுனியிலிருந்து அரை அடி உள்தள்ளி இருக்க வேண்டும். படுத்த நிலையில் அல்லது பாதி சாய்ந்த நிலையில் உள்ள திரைச் சாதனங்களைப் பார்க்க வேண்டாம்.



கணினியில் வேலை செய்யும்போது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை கண் பார்வையைக் கணினியிலிருந்து விலக்கி, 20 அடி தொலைவில் இருக்கும் ஒரு பொருளை 20 நொடிகளுக்குப் பார்க்க வேண்டும். மணிக்கொரு முறை 5 நிமிடம் எழுந்து நிற்கலாம் நடக்கலாம் கை, விரல்களை நீட்டி மடக்கலாம். இப்படிக் கழுத்துக்கு ஓய்வு தருவது முக்கியம்.

நாம் சாதாரணமாக நிமிடத்துக்கு 20 முறை கண் சிமிட்டுகிறோம். ஆனால், கணினியைப் பயன்படுத்தும்போது அல்லது தொலைக்காட்சிஃ திறன்பேசியைப் பார்க்கும்போது நிமிடத்துக்கு 7 முறை எனக் குறைகிறது. ஆகவே, அடிக்கடி கண்களைச் சிமிட்டுங்கள். இது கண்களை ஈரப்படுத்தும் கண் வறட்சியைத் தடுக்கும்.

சரியான வெளிச்சம் கிடைக்கும்படி விளக்குகள் இருப்பதையும் இருட்டில் வேலை செய்யாமல் இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். கண்கள் கூசும் அளவுக்குத் திரையில் அதிக வெளிச்சம் இருந்தால், ஃபில்டர்களைப் பயன்படுத்தலாம்.

# தீவிரமாகும் தாய்லாந்து–கம்போடியா மோதல்: ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையான பாதிப்பு



தாய்லாந்து- கம்போடியா மோதல் தீவிரம் அடைந்து வரும் நிலையில், ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கின்றனர்.

தென் கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து - கம்போடியா இடையே நூறாண்டுகளுக்கும் மேலாக எல்லை பிரச்னை நீடித்து வருகிறது. நீண்ட காலமாக நீடித்த இந்த எல்லை பிரச்னை, ஜூலையில் மோதலாக வெடித்தது. ஐந்து நாட்கள் நீடித்த மோதலில், ராணுவ வீரர்கள், பொதுமக்கள் என 43 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் மலேஷிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் முயற்சியால் இரு நாடுகளுக்கிடையே கடந்த அக்டோபரில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இருப்பினும், எல்லையில் பதற்றம் தொடர்ந்து நீடித்து வந்தது. சமீபத்தில், தாய்லாந்து வீரர்கள் கண்ணி வெடியில் சிக்கி காயமடைந்ததை அடுத்து, அமைதி ஒப்பந்தத்தில் விரிசல் ஏற்பட்டது.

அதிருப்தி அடைந்த தாய்லாந்து, அமைதி ஒப்பந்தத்தை காலவரையின்றி நிறுத்தி வைப்பதாக அறிவித்தது. தாய்லாந்து - கம்போடியா எல்லையில் நடந்த துப்பாக்கிச்சண்டையில் தாய்லாந்து வீரர் ஒருவர் கொல்லப்பட்டார் எட்டு வீரர்கள் காயமடைந்தனர்.

கம்போடியாவுக்கு பதிலடி கொடுக்க, அந்நாட்டின் ராணுவ இலக்குகளை குறிவைத்து வான்வழி தாக்குதலை தாய்லாந்து நடத்தியது. இதனால் இரு நாடு களுக்கு இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. எல்லையில் மோதல் நடக்கும் பகுதிகளில் இருந்து, ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கின்றனர். ஏற்கனவே மோதல்கள் காரணமாக, எல்லை பகுதியில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர்.

மோதல் 4வது நாளை எட்டியுள்ள நிலையில், 1,80,000 தாய்லாந்து நாட்டினர் எல்லையில் இருந்து வெளியேற்றப்பட்டு உள்ளனர். கம்போடியாவைச்சேர்ந்த 60,000 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். தாய்லாந்தும், கம்போடியாவும் பின்வாங்கப் போவதில்லை என்று உறுதியளித்துள்ளன. இதனால் பதற்றமான சூழல் நிலவுகிறது. (ஐ)

## 16 வயதுக்கு உட்பட்டோருக்கு சமூக வலைதள தடை அமல்: வீடியோ வெளியிட்டு ஆஸி., பிரதமர் பெருமிதம்



16 வயதுக்கு உட்பட்டவர்கள் சமூக வலைதளம்பயன்படுத்த தடை விதித்தது குறித்து ஆஸ்திரேலியா பிரதமர் அந்தோணி அல்பானீஸ்வெளியிட்டுள்ள வீடியோவில், ''குழந்தைகளுக்கு குழந்தை பருவத்தை கொடுக்கிறோம்'' என தெரிவித்துள்ளார்.

பேஸ்புக், இன்ஸ்டராகிராம், யுடியூப், டிக்டாக்' போன்ற சமூக வலைதளங்கள் உலகம் முழுதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. சமூக வலைதளங்களால் சிறுவர் - சிறுமியர் சீரழியும் போக்கும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

எனவே, இளம் தலைமுறையினர் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், உலகிலேயே முதல் நாடாக, 16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த ஆஸ்திரேலிய அரசு தடை விதித்தது.

இன்று டிச., 10ம் தேதி முதல் இந்த தடை முழுவீச்சில் அமலாகவுள்ளது. இது தொடர்பாக ஆஸ்திரேலியா பிரதமர் அந்தோணி அல்பானீஸ் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறி இருப்பதாவது:

16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சமூக வலைதளம் பயன்படுத்த தடைவிதித்த, உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா மாறி உள்ளது. இது பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் மன அமைதியை உருவாக்கும். இது அவர்கள் குழந்தைப் பருவத்தை அனுபவிக்க அனுமதிக்கிறது. ஆஸ்திரேலியா முழுவதும், 16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக ஊடகங்கள் இல்லாமல் தங்கள் நாளை சற்று வித்தியாசமாகத் தொடங்குகிறார்கள். இது ஒரு பெரிய மாற்றம். இது உண்மையில் முக்கியமானது. இன்றைய மாற்றம் உங்கள் குழந்தைகளை சமூக வலைதளத்தில் இருந்து பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். ஆஸ்திரேலிய குடும்பங்கள் குழந்தைகள் குழந்தைகளாக இருப்பதற்கான உரிமையையும், பெற்றோர்கள் அதிக மன அமைதியைப் பெறுவதையும் வலியுறுத்தும் நாள் இது. இன்றைய நாள் பெருமை வாய்ந்தது. இவ்வாறு அந்தோணி அல்பானீஸ் கூறினார். (ஐ)



## சீனாவில் 4 அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ 12 பேர் உடல் கருகி பலி


தெற்கு சீனாவில் 4 அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் சிக்கி 12 பேர் உடல் கருகி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குவாங்டாங் மாகாணத்தில் ஷாண்டோ பகுதியில் அமைந்துள்ள 4 அடுக்குகளைக் கொண்ட மாடி குடியிருப்பில் நேற்றிரவு 9.20 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது. சுமார் அரை மணிநேரம் கொளுந்து விட்டு எரிந்த இந்த தீயை தீயணைப்புத்துறையினர் போராடி அணைத்தனர்.

இந்தத் தீவிபத்தில் 8 பேர் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர். மேலும் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 4 பேர் மருத்துவமனையில் பலியாகியுள்ளனர். இதனால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12ஆக அதிகரித்துள்ளது.

குவாங்டாங் மாகாணத்திற்கு அருகாமையில் உள்ள ஹாங்காங்கில் கடந்த மாதம் ஏற்பட்ட தீவிபத்தில் 160 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, உயர் அடுக்குமாடி குடியிருப்புகளில் தீவிபத்து ஏற்படுவதை தவிர்ப்பதற்கான விழிப்புணர்வும், நடவடிக்கையும் சீன அரசு மேற்கொண்டு வந்தது. இந்த சூழலில், குவாங்டாங் மாகாணத்தில் இந்த சோகம் நிகழ்ந்துள்ளது. (ஐ)

## உலக வர்த்தகம் முதல்முறையாக 35 டிரில்லியன் டாலரை கடக்கும் ஐநா கணிப்பு



இந்தாண்டு இறுதிக்குள் உலக வர்த்தகம் முதல்முறையாக 35 டிரில்லியன் டாலரை கடக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது.

ஐநா வர்த்தக மற்றும் மேம்பாட்டு மாநாடு **(UNCTAD)** நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் 2025ம் ஆண்டில் கிழக்கு ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளே உலக வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அமெரிக்காவின் இறக்குமதி வலுவாக இருந்த போதும், சீனாவின் இறக்குமதி பின்னடைவை சந்தித்துள்ளது.

தற்போதைய கணிப்புகள் அப்படியே தொடர்ந்தால், 2025ம் ஆண்டு இறுதிக்குள் உலக வர்த்தகம் 35 டிரில்லியன் டாலரைத் தாண்டும். இது கடந்த ஆண்டோடு ஒப்பிடும் போது, சுமார் 7 சதவீதம் அதிகமாகும். இதில், சரக்கு வர்த்தகம் மட்டும் கடந்த ஆண்டை காட்டிலும் 6 சதவீதம் (1.5 டிரில்லியன் டாலர்) பங்களிப்பை கொடுத்துள்ளது. போர்கள், சர்வதேச அரசியல் நெருக்கடிகள், அதிகரித்த செலவுகள் மற்றும் உலகளவில் நிலவிய சீரற்ற தேவை உள்ளிட்ட காரணங்கள், வர்த்தக வளர்ச்சியின் வேகத்தை பாதித்த நிலையிலும், 2025ம் ஆண்டின் இரண்டாம் பாதியில் வர்த்தம் தொடர்ந்து விரிவடைந்துள்ளது.

2025ம் ஆண்டின் 3வது காலாண்டில் உலகளாவிய வர்த்தக வளர்ச்சி மெதுவாக இருந்தாலும், ஏப்ரல் - ஜூன் வரையிலான 2ம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

இருப்பினும், அடுத்த ஆண்டிற்கான உலகளாவிய வர்த்தக வளர்ச்சி நிச்சயமற்ற நிலையில் இருக்கிறது. மெதுவான உலகளாவிய பொருளாதார செயல்பாடு, அதிகரித்த கடன் மற்றும் வணிகச் செலவுகள் போன்ற காரணங்களால், வர்த்தக செயல்திறனை பாதிக்கிறது, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்.பல்கலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழு தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதுடன், அந்தப் பல்கலைக்கழகங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கமைவாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

எனினும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஆட்சேர்ப்புக்கான அங்கீகரிக்கப்பட்ட தாபன வழிகாட்டல்களை மீறி வேலைகள் உதவியாளர் மற்றும் வேறு சில வெற்றிடங்களைத் தனியார் நிறுவனம் ஊடாக நிரப்புவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்படுவதை நாம் அவதானிக்கின்றோம்.

இந்த நிலைமை அந்தப் பல்கலைக்கழகப் பணியாளர்களிடையே திருப்தியின்மையை ஏற்படுத்தியிருப்பதுடன், அதற்கு எதிராகத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் அவர்கள் தயாராகவுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் உடனடியாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலையிட்டு உரிய தீர்வை வழங்கத் தவறினால் நாம் காலாவிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை." - என்றுள்ளது.

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிவராமல் இருந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, நெடுந்தீவின் கடற்படைச் சுழியோடிகள் தேடுதலில் ஈடுபட்டு அந்த நபரைத் தேடி சடலமாக மீட்டெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், நெடுந்தீவு கிழக்கு, 15 ஆம் வட்டாரம், தொட்டாரம் பகுதியைச் சேர்ந்த பரராசசிங்கம் பிறேமகுமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீட்டுக்கு நேற்று சென்று விட்டு கிண்ணியாவில் உள்ள தனது மனைவியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த வேளை, சீனக்குடா பகுதியில் இராணுவ வாகனத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிண்ணியா தள வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையத்தின் முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களைத் தாங்கியவாறும், நீதி கோரிய பதாதைகளைத் தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்றாகும். இந்த மனித உரிமைகள் தினத்திலும் எமது உறவுகள் எங்கே? எமது உறவுகளுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை." - என்று அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அத்துடன் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கோரியும், பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் அவர்கள் குரல் கொடுத்ததுடன் சர்வதேச நாடுகள் மனித உரிமை தினத்திலாவது தங்களுடைய துன்பங்களைப் புரிந்து கொண்டு தமக்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதில் பாதிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் பலரும் கலந்துகொண்டு கண்ணீர் மல்க இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு - கிழக்கில், மலையகத் தமிழர் குடியேறு வதை, சிங்கள தேசம், அரசியல் நோக்கில் விரும்பாட்டி, நமக்குப் பாதுகாப்பான காணியை இங்கே தரட்டுமே! நானும், அதைத்தானே கேட்கின்றேன்.

நீங்கள் காணியும் தர மாட்டீங்க! போகவும் விட மாட்டீங்க! இன்னொரு 200 வருடங்கள், இப்படி மண்சரிவு மலைகளில் இருந்து, உழைத்து, ஓடாகி, மண்ணுக்கு உள்ளே மடியனும் என்பதா, உங்கள் வறட்டுவாத தீர்வு? தற்குறி தீர்வு?" - என்றுள்ளது.

## யாழில் ஓடும் பஸ்ஸின் மிதிபலகையில் நின்று முகம் கழுவிய நபர் கீழே தவறி வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், டிச. 10

ஓடும் பஸ்ஸின் பின் பக்க கதவுடன் உள்ள மிதிபலகையில் நின்று போத்தல் தண்ணீரில் முகம் கழுவியவர், கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்தை சேர்ந்த கருப்பையா சிவகுமார் (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வரும் மேற்படி நபர் அனுராதபுரத்தில் இருந்து நேற்றுக் காலை பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார்.

பஸ், யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்மித்ததும், பஸ்ஸில் இருந்து எழுந்து, ஓடும் பஸ்ஸின் பின் பக்க கதவுடன் உள்ள மிதிபலகையில் நின்று போத்தல் தண்ணீரில் முகம் கழுவியுள்ளார். அதன் போது, பஸ் சடுதியாக வளைவொன்றில் திரும்பும் போது, மிதிபலகையில் நின்று முகம் கழுவிக்கொண்டு இருந்தவர் வீதியில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்தவரை உடனடியாக மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இடியுடன் கூடிய மழை எச்சரிக்கை



மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கும் கடுமையான இடியுடன் கூடிய மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் சில பகுதிகளிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னலால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வானிலை ஆய்வு மையம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

# கொழும்புக்கு அதிரடி அறிவிப்பு



கொழும்பு மாவட்டத்தினுள் சட்டவிரோத கட்டுமானங்களுக்கு அனுமதியளிப்பதற்கோ அல்லது அபிவிருத்தியின் பெயரால் மக்களை ஆபத்தில் தள்ளும் குடியேற்றங்களை நிர்மாணிப்பதற்கோ ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற, கொழும்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்:

கொழும்பு மாவட்டம் வெள்ள நிலைமையால் இவ்வளவு தூரம் ஆபத்துக்குள்ளாகியிருப்பதற்கு, எந்தவொரு திட்டமிடலோ அல்லது சட்டதிட்டங்கள் குறித்த தெளிவோ இன்றி மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களே காரணமாகும். மிகவும் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் காரணமாகவே மாவட்டமும் மக்களும் இந்த ஆபத்துக்குள்ளாகியுள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட சூறாவளி நிலைமையால் அதிகளவான உயிர் மற்றும் சொத்துச் சேதங்கள் ஏற்பட்ட மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு மாவட்டத்திற்கு ஏற்பட்ட சேதம் குறைவாக இருந்த போதிலும், எதிர்காலத்தில் மாவட்டத்தில் ஏற்படக்கூடிய வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து விசேட தலையீடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பில் விசேடமாக விவாதிக்கப்பட்டது. வருடாந்தம் ஏற்படும் வெள்ளம் கொழும்பு மக்களின் இயல்பு வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறுவதற்கு ஒருபோதும் இடமளிக்க இயலாது. அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து மாவட்டத்தில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான பொதுத் திட்டமொன்றை முன்வைத்து, அதற்கேற்பச் செயற்படத் தேவையான நடவடிக்கைகளைத் தயார் படுத்த வேண்டும்.

கொழும்பு மாவட்டத்தினுள் ஆபத்து நிறைந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஏதேனும் தீர்வை வழங்குவது தொடர்பில் நாம் இப்போதே கலந்துரையாடி வருகிறோம் என்றும், ஊடகங்களிடம் பிரதமர் கூறினார்.

இந்த நிகழ்வில் நகர அபிவிருத்திப் பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, வெகுஜன ஊடகப் பிரதி அமைச்சர் கௌசல்யா ஆரியரத்ன, கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான அருண பனாகொட, சந்தன சூரியஆரச்சி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

# என் மகளை யாராவது வெளியே எடுத்துத் தாருங்கள்! மண்சரிவில் சிக்கிய மகளை தேடும் தாயின் கண்ணீர்

பதுளை, கந்தக்கெட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாகொல்ல கிராமத்தில் கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற பாரிய மண் சரிவில் காணாமல் போன தனது ஒரே மகளை தாய் தேடி வரும் துயர சம்பவம் பதிவாகியுள்ளது.



21 வயதான காயத்ரி காவிந்தி ராஜபக்ஷ என்ற யுவதி மண் சரிவில் சிக்கி 11 நாட்களாகியும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

அந்த கிராமத்தில் மண் சரிவில் சிக்கி மொத்தம் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். காணாமல் போன யுவதியின் உறவினர்கள் மூவரும் இதில் அடங்குவர்.

அதன்படி யுவதியின் பாட்டனார் மற்றும் பாட்டி ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

மண் சரிவில் இருந்து தப்பியோடும் போது மகள் அதில் சிக்கிக் கொண்டதாக தாய் தெரிவித்துள்ளார்.

தனது மகள் இந்த மண்மேட்டிற்குள் இரண்டடி அல்லது மூன்றடி ஆழத்தில் எங்கோ இருக்கிறார் என உறுதியாக நம்புவதாகவும்,

நான் ஒரு நாளைக்கு இருபது முப்பது தடவை இங்கே வந்து தேடுகிறேன். தயவுசெய்து யாராவது வந்து என் மகளை வெளியே எடுத்துத் தாருங்கள் என தாய் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளார். மகளின் கையைப் பிடித்துக்கொண்டு ஓட முயற்சித்த போது மகள் தோட்டப் பக்கம் பாய்ந்ததாகவும், மகள் கை நழுவியதாகவும், இரு வரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தாய் தெரிவித்தார்.

அவரது மகன் அருகில் உள்ள வயலில் இருந்து ஓடிவந்து என்னை காப்பாற்றியதாகவும் தெரிவித்தார். எனினும் மகளைக் காப்பாற்ற முடியவில்லை. மகள் மிகத் திறமையானவர் எனவும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லவிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.12.2025 வெளியிடப்பெற்றது.